Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.1 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. தங்கவேல் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 31.07.2024ம் தேதி எனது காட்டில் வைத்து விசாரித்தார்கள். மற்ற சாட்சிகளை அங்கு வைத்து விசாரிக்கவில்லை. இவ்வழக்கு புகாரை ஐந்து நாட்கள் காலதாமதமாக கொடுத்துள்ளேன். அந்த காலதாமதத்திற்கான காரணத்தை புகாரில் சொல்லவில்லை. என்னுடைய நிலத்தில் 5,6 வருடமாக என் மகன் சதிஷ்குமார் தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் நானும் என் மகனும் சேர்ந்து விவசாயம் செய்து வருகிறோம். தற்சமயம் சித்தாளந்தூர் கிராமத்தில் ரம்யா காம்ப்ளக்ஸ்க்கு அருகே வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். என்னை போலீசார் அரை மணி நேரம் விசாரித்த பிறகு, புகாரை எழுதி வாங்கினார். புகார் கொடுப்பதற்கு நானும், சாட்சிகள் சதிஷ்குமார், சுரேஷ்குமார், சதாசிவம், பழனிவேலு, பழனியப்பன், பரமேஸ்வரன், வடிவேலு, கரிகாலன் ஆகியோர் போனோம். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்கும், 1ம் எதிரி பழனியப்பனுக்கும் இடையே வழக்கோ, காவல் நிலையத்தில் புகாரோ நிலுவையில் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிரி பழனியப்பன் திருச்செங்கோடு கொல்லப்பட்டியில் குடியிருக்கிறார். சம்பவம் நடந்ததாகக சொல்லும் தேதியில் எனது மகன் சதிஷ்குமார் 1ம் எதிரியின் மகன் கார்த்திக்கு போன் மூலம் காலை 11.41 க்கு தகவல் சொல்லி அதன் பிறகு தான் 1ம் எதிரி அவரது மகனுடன் வீட்டிலிருந்து கிளம்பி சம்பவம் நடந்த காட்டிற்கு வருகிறார்கள் என்று

சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த சமயத்தில் எங்கள் காட்டில் 4,5 பேர் புல் புடுங்கி கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், என் மகன் எனக்கு தகவல் சொல்லிதான் நான் காட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. தீயணைப்பு வண்டி வந்த போதே, கிராம நிர்வாக அலுவலரும், கரும்பு இன்ஸ்பெக்டரும் வந்துவிட்டனர். அப்போது நேரம் சுமார் 11 மணிக்கு மேல் இருக்கும். அங்கு வந்த விஏஓ அறிக்கை தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கி தாசில்தாருக்கு அனுப்பினார் என்றால் சரிதான். அதன்பிறகு, தான் தோட்டக்கலை துறையிலிருந்து அதிகாரிகள் வந்து தீப்பிடித்து எரிந்த கரும்பு பயிரை பார்வையிட்டார் என்றால் சரிதான். நான் கரும்பு காட்டிற்கு மண்ணுக்கு அடியில் தான் சொட்டு நீர் பாசன குழாயை பதித்திருந்தேன். தென்னங்கன்றுகளுக்கு சொட்டு நீர் டியூபை மேற்பரப்பில் போட்டிருந்தேன். எனது நிலத்தில் தென்னங்கன்று வைத்திருந்தேன். ஊடுபயிராக கரும்பு போட்டிருந்தேன். சொட்டு நீர் பாசன அமைப்பை 2019ல் அரசு மானியம் பெற்று போட்டேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரில் சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் சதாசிவம், பழனிவேல், பழனியப்பன், பரமேஷ்வரன் ஆகியோர் இருந்ததாக சொல்லவில்லை. நானும், எனது மகன் சதிஷ்குமாரும் சேர்ந்து 1ம் எதிரி பழனியப்பன் மகன் கார்த்திகிடம் பாண்டு எழுதி கொடுத்து கடன் வாங்கியிருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த கடனை என் மகன் திருப்பி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது எதிரி தூண்டுதலின் பேரில் 2வது எதிரி நெருப்பு வைக்கவில்லை என்றும், 1ம் எதிரி என்னை பெட்ரோல் ஊற்றி கொலை செய்து விடுவதாக கொலை மிரட்டல் செய்யவில்லை என்றும், 1ம் எதிரியின் மகனிடம் வாங்கிய கடனை ஏமாற்றுவதற்காக பொய்யான புகாரை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் நிலத்திலிருந்து 7 மாத கரும்பு பயிர் தண்ணீர் பாய்ச்சப்படாமல் காய்ந்து கிடந்தது என்று சொன்னால் சரியல்ல. என் மகன் 01.05.2024ம் தேதி காலை 11.41 மணிக்கு 1வது எதிரி பழனியப்பனின் மகன் கார்த்திகிடம் போனில் பேசிய போது கரும்பு நோயால் தாக்கப்பட்டு வளர்ச்சி யில்லாமல் உள்ளதாகவும், தண்ணீர் பாயாமல் காய்ந்து கிடப்பதாகவும் சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. நான் புகாரில் இருபது லட்சம் சேதமாகிவிட்டதாக உண்மைக்கு மாறாக மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரிகள் தீ வைத்ததால் எனது காட்டில் தீ பரவவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.2 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சதிஷ்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை 28.07.2024ம் தேதி காலை 9, 10 மணி சுமாருக்கு எங்கள் தோட்டத்தில் வைத்து விசாரித்தார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக என்னையும், என் தம்பியையும், என் அப்பாவையும் அதே காட்டில் வைத்து விசாரித்தார்கள். என் தகப்பனார் 1 வருட காலமாக சித்தாளந்தூர் கிராமத்தில் குடியிருக்கிறார். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எங்கள் காட்டில் 4 பேர் புல் புடுங்கி கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த தோட்டத்தின் கிணற்றுக்கு அருகே நானும், என் தம்பியும், போர் வண்டியில் வேலை செய்யும் 7,8 பேர் சேர்ந்து போர் வண்டிக்கு பெயிண்ட் அடித்து கொண்டிருந்தோம். பழனியப்பன் நிலத்திற்கு வடக்கே பூரி கணேசன் தோட்டமும், கிழக்கே சண்முகம் தோட்டமும் உள்ளது. மேற்கேயும் சண்முகம் தோட்டம் உள்ளது. எங்கள் நிலத்திற்கு மேற்கே ராசு என்பவர் வீடு உள்ளது. மாட்டு ஆஸ்பத்திரி அருகே உள்ள வீட்டில் ஒரு குடும்பம் குடியிருக்கிறது. பூரி கணேசன் வீடும் சம்பவம் நடந்த நிலத்திற்கு கிழக்கே உள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுப்பதற்கு நானும், என் அப்பாவும் , மற்ற சம்பவ சாட்சிகளும் சேர்ந்து காவல் நிலையத்திற்கு போனோம். புகார் கொடுப்பதற்கு முன்பு, 1வது எதிரியிடம் ஊர்காரர்கள் பஞ்சாயத்து பேசினார்கள். அதன்பிறகு நாங்களும் ஊர்காரர்களும் சேர்ந்து தான் காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தோம். அ.சா.6 பழனியப்பன் தான் ஊரில் முக்கிய

பிரமுகர். 1வது எதிரியிடம் இருந்து ஊரில் வரி எதுவும் வாங்குவதில்லை என்றால் சரிதான். தீப்பிடித்துவிட்டதாக எனக்கு 100 நாள் வேலை செய்பவர்கள் தகவல் சொன்னார்கள். என்னுடைய செல்போன் எண்.94434-25599 ஆகும். 1வது எதிரியின் மகன் கார்த்திக் உடன் எனக்கு பழக்கவழக்கம் உண்டு. அவரிடம் தேவையிருந்தால் போனில் பேசுவேன். நான் மேற்படி கார்த்திகிடம் 10 லட்சம் கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கார்த்தியின் செல்போன் எண்.99442-03714 என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 01.05.2024ம் தேதி நான் கார்த்திகிடம் போனில் கரும்பு பயிர் நோயினால் தாக்கப்பட்டு காய்ந்துவிட்டதாக போனில் சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், சம்பவம் நடந்த 27.07.2024 ம் தேதி காலை 11.41 மணிக்கு காற்று வேகமாக அடித்ததால் தீ எங்களது காட்டிலும் பரவிவிட்டதாகவும், போனில் தகவல் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. கரும்பு காட்டில் தீ எரிந்து கொண்டிருக்கிறது என்ற தகவலை சொன்னேன். நான் காட்டில் தான் இருக்கிறேன் என்று சொன்னேன். அப்போது 1ம் எதிரியும், கார்த்திக்கும் வீட்டில் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள் என்று சொன்னால் சரியல்ல. சொட்டுநீர் பாசனம் போட்டு 2 வருடமாகும். அதற்கான ஆவணங்களை போலீசார் விசாரித்தபோது கொடுத்திருக்கிறோம். அடுத்த நாள் கிராம நிர்வாக அதிகாரி மற்றும் தோட்டகலைத்துறை அதிகாரிகள் தீப்பிடித்த காட்டை பார்வையிட்டார்கள். தீப்பிடித்து எரிந்த நாளே கிராம நிர்வாக அலுவலர், தீயணைப்பு துறையினர் மற்றும் தோட்டக்கலை அதிகாரிகள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். 27.07.2024ம் தேதி தீப்பிடித்த அன்று எடுத்த போட்டோவையும், 19,20,21 ஆகஸ்ட் மாதம் களஆய்வு செய்த போது எடுத்தபோட்டோக்களையும் பிரிண்ட் எடுத்து ஆகஸ்ட் 26ம் தேதி சிடியுடன் காவல் நிலையத்தில் கொடுத்தேன். நான் தோராயமாக 10, 12 போட்டோ எடுத்திருப்பேன். சா.பொ.1 புகைப்படங்களில் 3 புகைப்படங்கள் GPS உடனும், மற்ற இரண்டு புகைப்படங்கள் GPS இல்லாமலும் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். புகைப்படத்தில் உள்ளவாறு நிலத்தில் பைப்களும், டியூப்களும் இல்லை என்றும் வசதிக்காக பைப்களும், டியூப்களும் இருப்பது புகைப்படம் எடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், 1ம் எதிரி பழனியப்பன் மகன் கார்த்திக்குமிடையே சீட்டு போட்ட வகையில் வரவு செலவு உள்ளது. கார்த்திக் என் மீது தொகை கேட்டு வழக்கு போட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கார்த்திகிடம் வாங்கிய 10 லட்சம் ரூபாய் கடனை ஏமாற்றுவதற்காக நானும், என் தம்பியும், என் அப்பா மற்றும் சாட்சிகள் சேர்ந்து உண்மைக்கு மாறாக மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு எதிரிகளுக்கும் சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் நெருப்பு வைக்கவில்லை என்றும், எதிரிகள் எங்களை கொலை மிரட்டல் செய்ததாக சொல்வதும் உண்மையில்லை என்று சொன்னால்

சரியல்ல. சேதமதிப்பு ரூ.20 லட்சம் என்று மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.3 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சுரேஷ்குமார் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் 27.07.2024ம் தேதி மதியம் சுமார் 3மணிக்கு தீப்பிடித்த காட்டில் வைத்து விசாரித்தார்கள். என்னை விசாரித்த போது என் அப்பா அண்ணன் மற்றும் பிற சாட்சிகள் அங்கிருந்தார்கள். அவர்களையும் அங்கு வைத்தே விசாரித்தார்கள். சித்தாளந்தூருக்கும், எங்கள் காட்டிற்கும் இடையே 2,3 கி.மீ தூரம் இருக்கும். தீப்பிடித்த அன்றே தீயணைப்பு துறையினரும், விஏஓ-வும், காட்டிற்கு வந்துவிட்டார்கள். தோட்டக்கலை துறையை சேர்ந்தவர்கள் அன்று மாலை வந்தார்கள். போலீசார் சம்பவதன்றே காட்டிற்கு வந்து மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து தீப்பிடித்த காட்டை போட்டோ எடுத்தார்கள். 27ம் தேதி விசாரித்தபிறகு, போலீசார் என்னை மறுபடியும் விசாரிக்கவில்லை. ஊர் பஞ்சாயத்தார்கள்கூட்டிய பஞ்சாயத்திற்கு 1வது எதிரி வரவில்லை. அதனால் பஞ்சாயத்தார்களும் நாங்களும் சேர்ந்து போய் 31ம் தேதி புகார் கொடுத்தோம். போலீசார் விசாரித்தபிறகு, அவர்கள் சொல்லிக் கொடுத்தபடி புகாரை எழுதினோம் என்றால் சரியல்ல. என் அப்பா சொல்ல சதாசிவம் புகார் எழுதினார். எங்கள் நிலத்தில் இருந்த எரிந்து போன கரும்பை சர்க்கரை ஆலையிலிருந்து வந்து வெட்டி எடுத்துபோய்விட்டார்கள் என்றால் சரிதான். தீப்பிடித்து எரிந்த நிலத்தில் சொட்டுநீர் பாசனத்தை அரசு மானியம் வாங்கி அமைத்தோம் என்றால் சரியல்ல. வேளாண்மை உதவி

இயக்குநர் கபிலர்மலை அவர்கள் பார்வையிட்ட சமயம் அரசு மானியத்தில் சொட்டுநீர் அமைத்த ஆவணத்தை கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஒவ்வொரு வருடமும் கரும்பு அறுவடை செய்த பிறகு கரும்பு தோகையில் தீ வைப்போம். மேலே போட்டுள்ள ஒயரை அப்புறப்படுத்திவிட்டு தீ வைப்போம். பூமியில் பதித்துள்ள பிவிசி பைப்க்கு சேதமாகாதவாறு தீ வைப்போம். என் அண்ணன் சதிஷ்குமார் 1ம் எதிரியின் பழனியப்பன் மகன் கார்த்திக்கிடம் கடன் வாங்கியிருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது எதிரி தூண்டுதலின் பேரில் 2வது எதிரி கரும்பு தோகையில் தீவைக்கவில்லை என்றும் அதனால் தீ எங்கள் கரும்பு காட்டில் பரவவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரர் 1ம் எதிரியின் மகனுக்கு தீப்பிடித்த பிறகு தகவல் சொல்லி 1வது எதிரியும்அவரது மகனும் காட்டிற்கு வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1வது எதிரியும் அவரது மகனும் வந்தபோது புகையாக இருந்தது. அவர்கள் எப்போது வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் வருவதற்கு முன்பே தீயணைப்பு வண்டி வந்து தீயை அணைத்து கொண்டிருந்தது. இந்த வழக்கு குற்றத்திற்கும்எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.4 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சதாசிவம் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக என்னையும் மற்ற சாட்சிகளையும் போலீசார் 27.07.2024ம் தேதி மதியமே விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. 31.07.2024ம் தேதி புகார் கொடுத்த பிறகு, போலீசார் தீப்பிடித்த காட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். புகார் கொடுக்க தங்கவேலுடன் நானும், மற்ற ஊர்காரர்களும் போயிருந்தோம். ஊர்காரர்களிடம் தங்கவேல் சொல்லியிருந்தார். 1ம் எதிரி பழனியப்பனை பஞ்சாயத்திற்கு கூப்பிட்டு அவர் வருவதாக சொல்லிவிட்டு பிறகு வராததால் தங்கவேலுடன் நாங்கள் புகார் கொடுக்க போனோம். எந்த தேதியில் யார் எதிரி பழனியப்பனை பஞ்சாயத்து பேச அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. 1வது எதிரியின் காட்டிற்கு வடபுறம் பூரி கணேசன் காடு உள்ளது. அதை தொட்டடுத்த வடபுறம் எனது காடு உள்ளது. நான் முதல் விசாரணையில் 1வது எதிரியின் காட்டிற்கு அடுத்த வடபுறம் எனது காடு உள்ளதாக சொல்லியிருந்தால் அது தவறு. போலீசார் புகார் கொடுப்பதற்கு முன்பு அரை மணி நேரம் விசாரித்துவிட்டு புகார் கொடுக்கசொல்லி வாங்கினார்கள். 27.07.2024ம் தேதியே போலீசார் சம்பவம் நடந்த காட்டிற்கு வந்து போலீசார் விசாரித்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த போது 1வது எதிரி காட்டில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதியன்றே தீயணைப்புத்துறையினரும், விஏஓ மற்றும் பொன்னிசுகர்ஸ் அதிகாரிகள் தீ எரிந்த காட்டிற்கு வந்துவிட்டார்கள். தங்கவேலு

காட்டில் 7 மாத கரும்பு ஏற்கனவே தண்ணீர் இல்லாமல் வாடியிருந்தது என்றால் சரியல்ல. கரும்பு ஆய்வாளர் ஒவ்வொரு மாதமும் கரும்பு பயிரை ஆய்வு செய்து அறிக்கை தயாரிப்பார் என்றால் சரிதான். சாட்சி சுரேஷ்குமார் சம்பவததன்று காலை எதிரி பழனியப்பனின் மகன் கார்த்திற்கு போனில்தகவல் சொன்னபிறகு தான் எதிரி பழனியப்பனும் அவரது மகனும் சம்பவம் நடந்த காட்டிற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தீயணைப்புத்துறையினர் 12 மணிக்குள் வந்துவிட்டார்கள். என்னை விசாரித்த அன்று தோட்டக்கலைதுறையினர் சேதத்தை மதிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சேதமடைந்த பொருட்களின் மதிப்பை தனித்தனியாக குறிப்பிட்டு போலீசாரிடம் சொல்லவில்லை. தோராயமாக சேதமதிப்பு ரூ.20 லட்சம் என்று சொன்னேன். நான் சம்பவம் நடந்த தேதியில் நான் சம்பவ் இடத்திற்கு போகவில்லை என்றும், தீப்பிடித்த காட்டை பார்க்கவில்லை என்றும், தங்கவேலுவும், ஊர்க்காரர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி பழனியப்பன் சாட்சி தங்கவேலை மிரட்டியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

Judicial Form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

**Sessions Case No. 25 of 2025**

**Deposition of P.W.5 witness for Prosecution**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பழனிவேலு | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

எனக்கு புகார்தாரர் தங்கவேல் பங்காளி முறை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னையும், தங்கவேலையையும் அவரது மகன்களையும் மற்ற சாட்சிகளையும் ஒரே நேரத்தில் தான் விசாரித்தார்கள். போலீசார் என்னை சம்பவத்திற்கு பிறகு இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தார்கள். தீப்பிடித்த விவரத்தை 100 நாள் வேலை செய்பவர்கள் சொன்னதன் பேரில் நான் சென்று பார்த்தேன். 100 நாள் வேலை செய்பவர்கள் தீப்பிடித்த காட்டிற்கு 2,3 காடு தள்ளி உள்ள காட்டில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். நான் போன பிறகு முக்கா மணி நேரம் கழித்து தீயணைப்புத்துறையினர் மற்றும் விஏஓ வந்தார்கள். அவர்களுக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. புகார் கொடுப்பதற்கு என்னையும் கூட்டி போனார்கள். போலீசார் என்னை ஸ்டேசனில் வைத்து என்னிடம் கேட்டார்கள். அங்கு வைத்து மற்ற சாட்சிகளிடம் விசாரித்தகளா என்று நான் கவனிக்கவில்லை. அதன்பிறகு, போலீசார் காட்டிலிருந்த என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள். 1ம் எதிரியின் மகன் கார்த்திக்கிற்கு சாட்சி சதிஷ்குமார் போனில் தகவல் சொன்னபிறகு தான் 1ம் எதிரி பழனியப்பனும் கார்த்திக்கும் சம்பவம் நடந்த காட்டிற்கு வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

பழனியப்பனும், அவரது மகனும் தீயணைப்புத்துறை வண்டி வந்த பிறகு வந்தார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

மறுவிசாரணை :

எனக்கு பழனியப்பனும் அவரது மகனும் எங்கிருந்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் அவர்கள் வரும்போது தீ எரிந்து கொண்டிருந்ததையும் தீ அணைப்பதையும் பார்த்து கொண்டிருந்தேன்.

Judicial Form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL

## Sessions Case No. 25 of 2025

## Deposition of P.W.6 witness for Prosecution

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பழனியப்பன் | Taluk | : |
| Father's/ Husband's Name | : | Calling | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of September 2025.

(Accused A1 and A2 are present.)

(எதிரிகள் தரப்பில் குற்றவியல் பல்வகை மனு எண் MP.3/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. நான் ஊரில் தர்மகர்த்தாகவாக இருந்தேன். தற்போது நான் ஊர்பஞ்சாயத்து எதுவும் செய்வதில்லை. வீட்டோடு இருக்கிறேன். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. தங்கவேல் பஞ்சாய்ததில் சொன்னதன் பேரில் பஞ்சாயத்து பேசுவதற்காக மூன்று நான்கு நாட்கள் காத்திருந்தோம். அதன்பிறகு, பழனியப்பன் பஞ்சாயத்திற்கு வராததால் தங்கவேல் சொன்னதன் பேரில் காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தோம். பழனியப்பன் மனைவியும், சாட்சி தங்கவேலுவும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். கால்நடை மருத்துவமனை கட்டுவதை நான் தடுத்ததாக தங்கவேலும் பழனியப்பனும் சேர்ந்து என் மீது வட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் சரியல்ல. கட்டிடம் கட்டும் போது யாருக்கும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. 1ம் எதிரி பழனியப்பன் ஊருக்கு வரி கொடுத்து கொண்டிருந்தார். மருத்துவமனை கட்டுவதில் பிரச்சனை ஏற்பட்ட பிறகு நாங்கள் 1வது எதிரியை ஊரிலிருந்து ஒதுக்கிவைத்து அவரிடம் வரி வாங்குவதில்லை என்றால் சரியல்ல. நான் 1ம் எதிரி பழனியப்பனை 27ம் தேதி சாயங்காலம் பஞ்சாயத்திற்கு கூப்பிட்டேன்.

நான் அவ்வாறு பஞ்சாயத்திற்கு கூப்பிடவில்லை என்றும் தங்கவேல் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.